A/L 88
சனி, ஞாயிறு வகுப்பு
10 - 15:- மொத்தல்
11 - 45:- தொகையீடு
ஆரம்பம்:- 6-9-87
திரு. ரவிமோகன்
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில்)

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1-50

A/L 89
சனி, ஞாயிறு வகுப்பு
7 - 30:- தொடர்புவேகம்
8 - 45:- மீதித்தேற்றம்
ஆரம்பம்:- 6-9-87
திரு. ரவிமோகன்
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில்)

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஹு ஆவணி மீ உ 19 வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 09 (04 — 09 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 241

# முஸ்லிம்-தமிழர் ஒற்றுமையை குலைக்க தீயசக்திகள் முயற்சி!

## மோதலைத் தூண்டும் விதத்தில் வன்செயல்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 4

கிழக்கிலங்கை வாழ் முஸ்லிம் மக்களுக்கும், தமிழர்களுக்கும் இடையே நிலவும் ஒற்றுமையைக் குலைத்துவிடுவதற்குச் சில தீய சக்திகள் திரைமறைவில் இருந்து முயற்சி செய்துவருவதாக நம்பப்படுகிறது.

அதற்கேற்ற விதத்தில் இரு சாராரிடையேயும் மோதலைத் தூண்டும்விதத்தில் வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதாக அவதானிகள் கவலை தெரிவித்தனர்.

இதன் முதற்கட்டமாக முஸ்லிம் மக்கள் கொலை செய்யப்பட்டும் அவர்களது உடைமைகள் தீயிடப்பட்டும் வருவதாகவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒருவாரத்தில் இடம்பெற்று வரும் வன்செயல்களில் ஆகக் கடைசியாக மூதூர் உதவி அரசாங்க அதிபரான ஜனாப் ஹபீத் முகம்மது கொலை செய்யப்பட்டுள்ளார் என அறிவிக்கப்படுகிறது.

வடக்குக் கிழக்கு இணைப்பை ஆதரிப்பதாக இலங்கை முஸ்லிம் அரசியல் பிரமுகர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர் அல்லவா? அதனை செயலளவில் ஈடேறச் செய்யாமல் தடுக்கும் விதத்திலும், முஸ்லிம் மக்களைத் திசை திருப்பும் விதத்திலும் திரைமறைவில் செயல்படும் தீய சக்திகள், முஸ்லிம் மக்கள் மீது வன்செயல்களைக் கட்டவிழ்த்துவிடுவதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

இதன் ஆரம்பக் கட்டமாக தமிழ்விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவாக இயங்கிய முஸ்லிம் பிரமுகரை கொலைசெய்து விட்டு, பழியைத் தமிழர் இயக்கங்கள் மீது சுமத்தி

[6ம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி



முந்தியும் பல தடவை கிழக்கிலை முஸ்லிம் தமிழ் மக்களைப் பிரிச்சுவைக்க முயற்சித்தவை. அதுகள் சரிவரயில்லை.

ஆண்டாண்டு காலமாய் சகோதரர்களாய் ஒற்றுமையோடை இருக்கிற வையைப் பிரிக்கிறது சஷ்டம் பாருங்கோ......!

## ஈ.என்.டி.எல்.எவ். குழு இந்தியா பயணம்

யாழ்ப்பாணம், செப். 4

ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் ஈ. என். டி. எல். எவ் முக்கியஸ்தர்கள் நால்வர் நேற்று இந்தியா பயணமானார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாகவும், விடுதலை இயக்கங்களுக்கு வழங்கப்படவுள்ள, பிரதிநித்துவம் தொடர்பாகவும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காகவே அவர்கள் இந்தியா சென்றனர்.

—இவ்வாறு ஈ.என்.டி. எல். எவ். விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

திருவாளர்கள் மனோகரன், அமரன், ராஜா, ரகு ஆகியோரைக் கொண்ட குழுவே இந்திய அமைதிப் படையின் இராணுவ விமானம் மூலம் இந்தியா சென்றது.

தமிழ்நாட்டில் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனையும், புதுடில்லியில் வெளியுறவுச் செயலர் கே பி எஸ். மேனன், திரு. குல்தீப் சகாதேவ் ஆகியோரையும் இவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இரட்டைக் கொலைச் சம்பவம்

## 2 தமிழ்ப் போராளிகள் தமிழகத்தில் கைது!

கோட்டூர் அருகில் நடந்த இரட்டைக் கொலைச்சம்பவம் ஒன்று தொடர்பாக இரண்டு இலங்கைத் தமிழ்ப் போராளிகள் உட்பட மூவரைப் பொலீஸார் கைது செய்தனர்,

இலங்கைத் தமிழ்ப் போராளிகள் என்று கூறப்படுபவர்களின் பெயர்கள் வருமாறு;

சத்தியசிலன் வயது 24. பட்டதாரி இளைஞன். சுதாகரன் வயது 23.

மூன்றுவது நபரின் பெயர் யோசப், வயது 34. (உ)

## இலங்கையர் உட்பட 2 மாலுமிகளைக் காணவில்லை

லண்டன், செப். 4

வளைகுடாவில் ஈராக் யுத்த விமானங்கள் நடத்திய தாக்குதலில் இரண்டு மாலுமிகள் காணமல் போய்விட்டனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

இவர்களில் ஒருவர் இலங்கையர். மற்றவர்

(6ஆம் பக்கம் பார்க்க]

## விடுதலையான 114 பேர் இன்று காங்கேசனில்

யாழ்ப்பாணம், செப். 4

பூஸா தடுப்பு முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட 114 தமிழ்க் கைதிகள் இன்று காங்கேசன்துறை துறைமுகத்தில் வைத்து யாழ். செயலக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் படுவர்.

ஏற்கனவே திருமலை கொண்டு வரப்பட்ட இவர்கள் அங்கிருந்து கப்பல் மூலம் காங்கேசன் துறைக்கு அழைத்துவரப் பட்டு—

காலை 9 மணியளவில் செயலக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவர்.

## உலக வங்கிக் குழு நாளை யாழ் வருவார்

யாழ்ப்பாணம், செப். 4

உலக வங்கிக் குழு நாளை சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் வருகிறது.

இவர்களுடன் புனர் வாழ்வு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோவும் வருகிறார்.

நிதி அமைச்சர் ரொனி டீ மெல் இவர்களுடன் இங்கு வருவாரா என்பது குறித்து இறுதி முடிவு இதுவரை எடுக்கப்படவில்லை எனத் தெரிகிறது:

உலக வங்கிக் குழுப் பிரதிநிதிகள் யாழ் செயலகத்தில் கூட்டம் ஒன்றில் பங்குபற்றுவர்.

அதன்பின் அவர்கள் வடபகுதியில் பாதிக்கப் பட்ட இடங்களைச் சுற்றிப் பார்வையிடுவார்கள்.

யாழ். நகரில் உள்ள சில முக்கிய பிரமுகர்களையும் இவர்கள் சந்தித்து உரையாடுவர் என எதிர் பார்க்கப்படுகிறது. (உ-7)

நிலைமையை அவதானிக்க

## பிரிட்டிஷ் அமைச்சர் யாழ் வருகை

கொழும்பு, செப். 4

பிரிட்டிஷ் உள்துறை இணை அமைச்சர் இம்மாதம் பத்தாம் திகதி கொழும்புக்கு வருகின்றார்.

யாழ்ப்பாணம் சென்று சிவில், இராணுவ அதிகாரிகள், இந்திய அமைதிப்படை அதிகாரிகளுடன் இவர் பேச்சுக்கள் நடத்துவார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர் பிரதிநிதிகளுடனும் இவர் உரையாடுவார்.

யாழ் நிலைமை பற்றி அறிந்து கொள்ளுவதே அவரின் யாழ் விஜயத்தின் நோக்கம் என்று தெரிகின்றது

பின்னர் திருமலை செல்லும் இவர், கொழும்பு பிரிட்டிஷ் தூதரின் இல்லத்தில் நடத்தப்படவுள்ள செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொள்வார்.

## ஆஸி பிரதிநிதி யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், செப் 4

நேற்று யாழ்ப்பாணம் விஜயம் செய்த ஆஸ்திரேலிய தூதரகத்தின் வெளிநாட்டு உதவிகள் தொடர்பான உயர் அதிகாரி ஜெய்ப்பூர் கால் தொழிற்சாலைக்கு ஒரு லட்சம் ரூபா நன்கொடை வளங்கினார்.

சுண்டுக்குளியில் உள்ள ஜெய்ப்பூர் கால் தொழிற்சாலைக்குவிஜயம் செய்த அவர் மேற்படி

(6 ஆம் பக்கம் பார்க்க]

## கனேடிய அதிகாரியும் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், செப் 4

கனேடிய தூதரக உயர் அதிகாரி ஒருவர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்.

வடபகுதியில் சேதமடைந்த பல இடங்களைப் அவர் பார்வையிட்டார். (உ-7)

## ஆஸி தூதர் வருவார்

யாழ்ப்பாணம், செப். 4

இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதர் எதிர் வரும் 17 ஆம் திகதி வடபகுதிக்கு விஜயம் செய்வார்.

இங்கு இரண்டு நாட்கள் தங்கியிருக்கும் தூதர் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதுடன், உயர் அதிகாரிகள் சிலரையும் சந்தித்துப் பேசுவார். (உ-7)

## குருநகரில் குடியிருக்க வந்த இயக்கத்தினரை வெளியேறக் கேட்டு மக்கள் ஆட்சேபம்

குருநகர். செப் 4

குருநகரில் குடியிருக்க வந்த இயக்கத்தினரை வெளியேறக் கேட்டு அப்பகுதி மக்கள் ஆட்சேபம் தெரிவித்திருக்கின்றனர்.

ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் 25 பேர் நேற்று முன்தினம் யாழ் டழைய - பூங்கா வீதியில் உள்ள ஒரு வீட்டில்வந்து தங்கினர்.

இதனையடுத்து குருநகர் பொதுமக்களில் சிலர் நேற்றுமாலை அங்கிருந்து சென்று விடும்படி அவர்களிடம் கேட்டுக் கொண்டனர்.

இவ்வேளையில் இந்திய அமைதிப்படையைச்சேர்ந்த இராணுவ வீரர்கள் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கினர்.

வீட்டில் பறக்க விடப்பட்ட கொடியை கழற்றுவித்த போதுமக்கள், நீங்கள் இவ்வளவு காலமும் எங்கு இருந்தீர்கள்? இப்பொழுது ஏன் இங்கு வந்துள்ளீர்கள்? என்ற கேள்விகளை எழுப்பினர்.

எங்களை இனிமேலாவது நிம்மதியாக வாழ விடுங்கள். எங்களுக்கு

( 6 ம் பக்கம் பார்க்க)

தடுப்புக்காவலில் உள்ள சகல இன

## கைதிகளை விடுவியுங்கள் அல்லது என்னையும் சிறையிலிடுங்கள்

### வண. சிங்கராயர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப் 4

மகஸின் சிறையில் காவலில் வைக்கப்பட்டுள்ள சகல இன அரசியல் கைதிகளையும் விடுதலைசெய்ய நடவடிக்கை எடுங்கள். அப்படி உங்களால் முடியாவிடின் என்னை மீண்டும் கைது செய்து மகஸின் சிறையில் அடைக்கும்படி உங்கள் ஜனாதிபதியிடம் கூறுங்கள். சிறையில் உள்ள எனது தோழர்களுடன் நான் சாகலாம்.

இப்படி வண. பிதா ஆபரணம் சிங்கராயர், பிரதி நீதி அமைச்சர் ஷெல்டன் ரணராஜாவுக்கு அனுப்பிவைத்துள்ள வேண்டுகோளில் கூறியிருக்கின்றார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது :

என்னை விடுதலைசெய்தது போன்று ஏனைய அரசியல் கைதிகளை விடுதலை செய்வதில் ஏன் தாமதம்காட்டப்படுகின்றது என்பதை விளங்கிக் கொள்ள என்னால் முடியாமல் உள்ளது

அக்கைதிகள் மகஸின் சிறையில் பணயமாக வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று பலத்த சந்தேகப்படுகின்றேன்.

என்னை விடுதலைசெய்த தினம் சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயத்தில் சிறைச்சாலை ஆணை

[6ம் பக்கம் பார்க்க]

## மட்டு.-பொலன்னறுவை எல்லைக் கிராமங்களிலும் சிங்களக் குடியேற்றம்

மட்டக்களப்பு, செப். 4

மட்டக்களப்பு-பொலன்னறுவை மாவட்ட எல்லைக் கிராமங்களிலும் சிங்களக் குடியேற்றம் நடைபெறுவதாக, அப்பகுதியிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்புமாவட்ட எல்லையாக விளங்கும் புனானை பகுதி, மாதுறு ஓயா திட்டத்தில் அடங்குகின்றது

மாதுறு ஓயா அபிவிருத்தியின் கீழ் குடியிருப்பு வசதிகள், அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் சிங்கள குடியேற்றம் விஸ்தரிக்கப்பட்டு வருவதா

(6ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

4-9-1987
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
6.05 முதல் 7.35வரை
ராகுகாலம்:-
10.35 முதல்-12.05வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
வாமன ஜயந்தி
ஏகாதசி விரதம்

## முஸ்லிம்களின் வீடுகள் பொத்துவிலில் எரிப்பு

யாழ்ப்பாணம், செப். 4

கடந்த முதலாம்திகதி பொத்துவிலில் பாக்கியவத்தை என்ற இடத்தில் முஸ்லிம் மக்களின் 3 வீடுகளை சிறிலங்கா பொலீசார் எரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் முறையிட்டுள்ளனர்.

பொலீஸ் நிலையத்திலிருந்து 500 யார் தூரத்தில் உள்ள இவ் வீடுகள் எரிக்கப்பட்டதையடுத்து பொலீஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்யச் சென்ற முஸ்லிம் மக்கள் ஆயுதம் தாங்கிய பொலீசாரினால் வழிமறிக்கப்பட்டு திருப்பியனுப்பப் பட்டதாகவும் - இது பற்றி இந்திய சமாதானப் படைக்கு முறையிட்ட போதும் அவர்களும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் பாக்கியவத்தை மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் முறையிட்டுள்ளனர் (உ)

## வடக்கிற்கு 11 பஸ்கள்

கொழும்பு, செப். 4

அடுத்த வெள்ளிக்கிழமை பதினொரு பஸ்கள் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குக் கையளிக்கப் படும்.

போக்குவரத்து அமைச்சர் எம். எச். முஹம்மது சம்பிரதாய பூர்வமாக பஸ்களைக் கையளிப்பார்.

இந்த பஸ்கள் எதிர் வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நோக்கி கொழும்பிலிருந்து புறப் படும். ( உ-எ)

## புலிகள் போராளி பன்றிவிரிச்சானில் வெட்டிக் கொலை

### 'புளொட்' மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 4

கடந்த புதனன்று பன்றிவிரிச்சானில் தமது முகாம் ஒன்றை புளொட் இயக்கத்தினர் தாக்கியதாகவும்—

இத்தாக்குதலின்போது நிராயுதபாணியாக இருந்த தமது தோழர்கள் படுகாயமடைந்ததாகவும்—

படுகாயமடைந்த தமது இயக்கத்தவரான டென்சிலி என்பவரை புளொட் இயக்கத்தினர் வாளால் வெட்டிக் கொன்றதாகவும் புலிகள் குற்றஞ் சாட்டி உள்ளனர்,

மக்களின் விடுதலைக்காகப் போராடி தினம், தினம் தமது உயிரைக் கொடுத்து இன்று 631 பேரை எதிரியால்இழந்து விட்டோம்

எதிரியிடமிருந்து எம் மக்களைக் காப்பதற்காக உயிரைக் கொடுத்த நாம் இன்று துரோகக் குழுக்களால் உயிரை இழக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

இத்தகைய செயல்கள் குறித்து இந்திய அமைதி காக்கும் படைக்கு முறையிட்டும் அவர்கள் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. இந்திய அரசின் போக்கு எமக்கு பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது

- இப்படி புலிகள் இது சம்பந்தமாக விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்கள். (உ)

## பேச்சுத் தொடர்கிறது

புதுடில்லி, செப் 4

மாகாண சபைக்கான அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமாக இந்திய, இலங்கை அரசுகளின் அதிகாரிகளுக்கு இடையேயான பேச்சுக்கள் இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்து புதுடில்லியில் இடம்பெற்றன.

பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்பட்டன என்று வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-எ)

## பிரேமானந்தா கடத்தப்பட்டார்

யாழ்ப்பாணம், செப் 4

யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற கே. பிரமானந்தா என்ற இளைஞர் மட்டுவில் மாணவனை என்னும் இடத்தில் இனந் தெரியாதவர்களால் வைத்துக் கடத்தப்பட்டார்

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்றது

கடத்தப்பட்டவர் ஈ. பி. ஆர். எல். எவ் பிரமுகர் டக்ளஸ் தேவானந்தனின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மோதல்

யாழ்ப்பாணம், செப் 4

நேற்றுக் காலை 11-30 மணியளவில் மூன்றும் பிட்டி என்ற இடத்தில் வைத்து ஜீப்பில் சென்று

(6-ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★ ★★★★
★ சின்னஞ் சிறு ★
★ விளம்பரம் ★
★★★★ ★★★★

விகுப்புகள்

Computer Programming (BASIC) முழுமையான பயிற்சி றேடியோ, ரீ. வி. றிப்பியறிங், வயறிங், வைன்டிங், Spoken English ஆரம்பம். 5-9-87 Able Technical Studies, கே. கே. எஸ். வீதி, சுன்னுகம், சேர்ச் லேன், சாவகச்சேரி. உடையார் லேன், இளவாலை.

VACANCY

Wanted an experienced Clerk-Typist R.R.F-1983 Office, Y.M.C.A. Building, Jaffna. Apply With bio data before 10th Sept. 1987.
-TREASURER.

இலங்கை - இந்திய ஒப்பந்தம்:

# இரு நாட்டுத் தலைவர்களினதும் துணிகரச் செயலாகும்

## அபி. சபை கூட்டத்தில் உதுமாலெப்பை பாராட்டு

அம்பாறை, செப் 4

இலங்கை – இந்திய சமாதான ஒப்பந்தம் நாட்டில் நிரந்தர சமாதானம் நிலவுவதற்கு வழிவகுக்கும். இருநாட்டுத் தலைவர்களினதும் துணிகர செயலை நாம் பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்'.

பொத்துவில் முதலாவது நாடாளுமன்ற உறுப்பினர் ஜனுப் எம். ஐ உதுமாலெவ்வை மேற்கண்டவாறு கூறினார்.

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி சபையின் மாதாந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை- இந்திய ஒப்பந்தத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் பிரேரணையின் மீது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

அபிவிருத்தி சபைத் தலைவர் ஜனுப்.எம்.எச். எம். ஜெளபர் தலைமையில், அம்பாறை கச்சேரி அபிவிருத்தி சபை மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

பாரதத் தலைவரும், எமது தாயகத் தலைவரும் எம்மால் மறக்க முடியாதவர்கள். அவர்கள் இருவரினதும் துணிகர செயலால் நாம் இன்று அமைதி கண்டுள்ளோம்.

நாட்டின் வரலாற்றில் இந்த ஒப்பந்தம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இருநாட்டுத் தலைவர்களினதும் நல்நோக்கும் மக்கள் சேவையும் காரணமாகவே அவர்கள் இருவருக்கும் நிகழ்ந்த துர்ப்பாக்கிய சம்பவங்களின் போது இறைவனது துணை கிடைத்து காப்பாற்றப்பட்டனர்.

இவ்வாறு அவர் கூறினர்.

அபிவிருத்திச் சபைத் தலைவர் ஜனுப். ஜெளபர் பிரேரணையை முன்மொழிந்தார். பிரதி அமைச்சரும், அம்பாறை மாவட்ட அமைச்சருமான திரு. பீ. தயாரத்ன அதனை வழிமொழிந்ததுடன் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ஓ-14)

## அச்சகம் சீல்வைப்பு

கொழும்பு, கிராண்ட்பாஸில் அச்சகம் ஒன்று கடந்த செவ்வாய்க் கிழமை சீல் வைக்கப் பட்டது.

தடைசெய்யப்பட்ட இயக்கம் ஒன்றிற்காக துண்டுப்பிரசுரங்கள் இந்த அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டன என்று சந்தேகிக்கப்படுகின்றது. (இ-எ)

## "சொல்லின்றுற் சுடுவேன்"

யாழ்ப்பாணம், செப். 4

ஊரெழு மீனுட்சியம்பாள் ஆலய மகோற்சவ இலக்கிய விழாவில் இன்று "சொல்லின்றுற் சுடுவேன்" என்ற தலைப்பில் திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) உரையாற்றுவார்.

திரு வை. தனிஸ்வரன் தலைமை வகிப்பார். (ஓ)

ஆசிரியர்களுக்கான

## அகில இலங்கை சிறுகதைப் போட்டி

மானிப்பாய், செப். 4

அரசாங்க பாடசாலைகள், அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் அங்கீகரிக்கப்பட்ட பிரிவேனுக்கள் ஆகியவற்றைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கிடையேசிறுகதைப் போட்டி ஒன்றை நடத்த கல்வி அமைச்சு நடவடிக்கை மேற் கொண்டு வருகிறது.

ஆசிரியர் களுக்கான எழுத்தாளர்களின் படைப்புத்திறனை வளர்ப்பதும் பாடசாலைப்பிள்ளைகளுக்குப் பொருத்தமான சிறுகதைகள் எழுதுவிப்பதை ஊக்குவிப்பதுமே இப் போட்டியின் நோக்கமாகும்.

இப்போட்டிகள்சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடத்தப்படும்.

போட்டிகளின் முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்களைப் பெறும் எழுத்தாளர்களுக்கு முறையே ரூபா 2500, ரூபா 2000 ரூபா 1500 சன்மானம் வழங்கப்படும்:

மேலும் ஒவ்வொன்றும் ரூபா 500 பெறுமதியுடைய ஏழு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. (ஓ-90)

## விவேகானந்த சபையின் பரீட்சை

கொழும்பு விவேகானந்த சபையினுல் நடத்தப்படும் சைவ சமய பாடப் பரீட்சை நவம்பர் மாதம் 15ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலைகள், "பரீட்சை உதவிச் செயலாளர், 34, விவேகானந்த மேடு, கொழும்பு – 13" என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு பரீட்சை விதிகள் அடங்கிய பாடத்திட்டத்தையும் தமக்குத் தேவையான விண்ணப்பப்படிவங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கான இறுதித்திகதி30-09-1987 ஆகும். (ஓ)

## பிபிலை எம். பி.யை கொல்லச் சதி செய்தனராம் இருவர் கைதாகினர்

கொழும்பு, செப். 4

பிபிலை எம். பி. தர்மதாஸ பண்டாவை கொலைசெய்ய சதி செய்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகப் பொலீஸார் இரண்டு பேரைக் கைதுசெய்திருக்கின்றனர்.

ஒருவர் கிராம சேவையாளர். மற்றவர் விவசாயி.

சென்ற 25ஆம் திகதி இரண்டு சந்தேகநபர்களும் சிலரை அணுகி பிபிலை எம். பி.யைக் கொலைசெய்யும் முயற்சியில் சேரும்படி கோரினூர்களாம். (இ-எ)

## தேரர் கைது!

கொழுமபு, செப். 4

அண்மைக் கால வன்செயல்கள் தொடர்பாக வண. மடுலுவேவ சோபித தேரரை பொலீஸார் கைதுசெய்தனர்.

விசாரணைக்காக அவர் தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். (இ-எ)

## வரியிறுப்பாளர் கூட்டத்தில் ஆராய்வு

யாழ்ப்பாணம், செப். 4

வருமானவரி செலுத்தும் கைத்தொழில் நிறுவனத்தினர், வியாபாரிகள், கணக்காளர்கள், வைத்தியர் முதலியோர் தங்கள் பிரச்சினைகளை ஆராய்வதற்காக இவர்கள் அண்மையில் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

இதுவரை தமக்கு ஏற்பட்ட பாரிய நட்டங்களையும், இழப்புக்களையும் அரசாங்கத்திற்குத் தெரிவித்து உடன் நிவாரணம் பெற வேண்டிய அவசியத்தையும் அதற்கான வழிமுறைகளையும் அப்போது அவர்கள் ஆராய்ந்தனர்.

சலுகைக் கட்டணத்தில் குறுகிய காலத்தில்

✶ கம்யூட்டர் கல்வி ✶

(Computer Programming in Basic Language)

பயிற்சிக்காலம்:- 2 மாதம்

கட்டணம் 750/- மட்டும்

(பகுதி பகுதியாகச் செலுத்தலாம்)

சனி, ஞாயிறு 05-09 87

திங்கள், புதன் வெள்ளி 07-09-87

O/L படித்த இருபாலாரும் சேரலாம்.

சான்றிதழ் Diploma வழங்கப்படும்.

Unikco Computer Centre

யாழ். ரோட், (சதுமலைச்சந்தி) மானிப்பாய்.

K. K. S. Road, (3-ம் கட்டை கொக்குவில்.

★ ★

பிரயாண ஒழுங்குகள்

HORIZON ENTERPRISES

A. பத்மதாஸ்

எமது புளியங்கூடல் கிளைக் காரியாலயத்திற்கு பெண் லிகிதருக்கான பதவிக்கு புளியங்கூடல் சுற்றுடலில் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன- விண்ணப்பிப்போர் 06 - 09 - 87 ஞாயிற்றுக் கிழமை காலை 9 - 00 மணிக்கு எமது யாழ் தலைமைக் காரியாலயத்திற்கு நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவும்.

யாழ் தலைமைக் காரியாலயம்

97, பருத்தித்துறை வீதி,

கல்வியங்காடு.

கச்சேரி யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் (குருநகர்) உணவுக்களஞ்சியத்திற்கான

திருத்தவேலைகள்

புதிய களஞ்சியம்.

1. கூரை திருத்த வேலைகள்.
2. இரும்புக்கதவுகளில் திருத்த வேலைகள்.
3. யன்னல் திருத்த வேலைகள்.

பழைய களஞ்சியம்.

1. கூரை திருத்த வேலைகள்.
2. கதவுகளின் திருத்த வேலைகள்.

காரியாலய அறை

காரியாலய அறையில் உள்ள சகல திருத்த வேலைகளும்.

வெளித் தண்ணீர்த் தொட்டி.

தண்ணீர் தொட்டித் திருத்த வேலைகளும்.

காவலாளிகளின் அறை.

சகல திருத்த வேலைகளும்.

மேற்சொல்லப்பட்ட திருத்த வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, கோரப்படுகின்றன. 1987ஆம் ஆண்டு செப்டெம்பர் பதினேராம் திகதி நண்பகல் 12 மணிவரை கீழ்க் குறிப்பிடப்படுபவரால் அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படும்.

இக் கேள்விப் பத்திரங்கள் மேலதிக அரசாங்க அதிபர், கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

மேற் சொல்லப்பட்ட வேலைகள் சம்பந்தமான விவரங்களை எனது காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம் என்பதை அறியத் தருகிறேன்.

கேள்விப்பத்திரப் படிவங்களை யாழ்ப்பாணம் கச்சேரி உணவுக் கட்டுப்பாட்டுக் கிளையிலிருந்து 09-09-87ஆம் திகதி காலை 11 00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

சி. பற்குணம்

உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி,

யாழ்ப்பாணம்.

பிரயாண ஒழுங்குகள்

☆ பின்வரும் வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் எம்மிடமுண்டு

★ சவூதி அரேபியா

1. TINKER... 21 வயதிற்கு மேற்பட்டோர்

2 Security Guards

5 வருஷ படைவீரர் அனுபவம் தேவை. (POLICE, ARMY)
அடிப்படைச் சம்பளம் 600 S. R.
வயது – (30 - 35)

3. American Company (JEDDHA)

(A) 25 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு மட்டும்
சாப்பாடு, இருப்பிட வசதியுடன் சம்பளம் 500 S. R.

(B) 21 வயதிற்கு மேற்பட்டவர்கள் CLEANERS
சாப்பாடு, இருப்பிட வசதியுடன் சம்பளம் 350 S. R.

4. OPEN VISA

25 வயதிற்கு மேற்பட்டோர்

(a) Air condition Technician
(சாரதி லைசென்ஸ் உடன்)

(b) COOK
(சாரதி லைசென்ஸ் உடன்)

★ லிபியா ★

Cleaners -- Oil Company
(25 வயதுக்கு மேற்பட்டோர்)

★லெபனுன் --- CLEANERS

(A) ஆண்கள் 18 வயதிற்கு மேற்பட்டோர்
அடிப்படைச்சம்பளம் 3,500/, ரூபா
(சாப்பாடு இருப்பிடத்துடன்)

(B) பெண்கள் 18 வயதிற்கு மேற்பட்டோர்
அடிப்படைச் சம்பளம் 2,500/- ரூபா
(சாப்பாடு இருப்பிடத்துடன்)

★ IRAQ ★

(HOSPITAL Cl EANERS JAPANESE COMPANY)

● 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்
சம்பளம் இருப்பிட வசதியுடன் 65 டினுர்

முக்கிய குறிப்புகள்

★ அளவெட்டி, தெல்லிப்பளை, காங்கேசன்துறை மக்களின் நலன் கருதி மீண்டும் புதன் தொடக்கம் (02-09-1987) காங்கேசன் துறையில் உள்ள காரியாலயம் திறக்கப்பட்டுஉள்ளதால்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காங்கேசன்துறை முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம்.

★ எமது ஸ்தாபன நிர்வாகி வந்துள்ளமையால் பாஸ்போட் ஒப்படைத்தவர்கள் உடன் வந்து அவரைச் சந்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

★ T. இந்திரநாதன் ★

☆ M3 ரவல்ஸ் ☆

சற்குணவாசா (சோதிலேன்)

காங்கேசன்துறை.

(பஸ்வழி இலக்கம்:- 769)

★ T. இந்திரநாதன் ★

M THREE TRAVELS

96, Kachcheri Nallur Road,

Nallur, Jaffna.

(முத்திரைச் சந்திக்கு அருகாமையில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி இரதோற்சவ சிறப்புமலர்


''அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்''

● தித்திக்கும் ● சுவைமிகு ● ஐஸ்கிறீம் வகைகளுக்கு

★ சந்திரா ★ கிறீம் ★ ஹவுஸ்

துர்க்கை அம்மன் உற்சவத்தை முன்னிட்டு உங்கள் ஆவலைப் பூர்த்திசெய்ய எமது கிளை துர்க்காபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.


## அம்பிகையின் நல் அருட்பிரவாகம்

தேவி உபாசகரான திருக்கடவூர் பட்டர் பிரான் பதினெட்டாம் நூற்றாண்டில் அபிராமித் தாயார் மீது அந்தாதி பாடியருளி, அபிராமி பட்டர் என்னும் திருநாமமும் பெற்றுய்ந்தார். அன்பர் அடியார்களை அம்பிகையிடம் ஆற்றுப்படுத்திய பழைய நூலொன்று மதுராபுரி அம்பிகை மாலை எனப் பெயர் பெற்றது. பதினைரும் நூற்றாண்டில் எழுந்த பக்திமயமான தோத்திர மாலை இது. இது முப்பது கட்டளைக் கலித்துறைப் பாடல்களாலானது. கல்லாதவர்களையும் கல்நெஞ்சினர்களையும் கனிய வைப்பது. பெரும் பக்திமானான வரகுணராம குலசேகர பாண்டியன் என்னும் மன்னனாற் பாடப்பெற்றது.

அபிராமி பட்டர் தம் காலத்துக்கு முன்னெழுந்த அம்பிகை மாலையை நன்கு பயின்று பாராயணம் செய்து வந்தார் எனக் கருதும் வகையில், அவர் அம்பிகை மாலையின் அழகான சொற்றொடர்களை அப்படியே தம் அந்தாதியிலும் கையாண்டுள்ளார் என்பதைப் படிக்குந் தோறும் இதயம் மலருகின்றது கண்கள் நீர் சொட்டுகின்றன.

''ஒழியாப் பனித்தடங் கண்ணீர் சொரியவந்
துன்னடிக்கே
பொழியாப் புதுமலரிட்டு நிற்பார்க்குன் பொழி
கருணை
விழியாற்சுரப்ப அலர்ந்த செந்தாமரை வீடொன்
றவே
அழியாப் பதந்தருவாய் மதுராபுரி அம்பிகையே''

இவ்வாறு பாண்டிய மன்னன் பண்டு பாடிய மரபு பட்டர் பிரானையும் பிற்காலத்திற் பாட வைத்தது. தென்னாட்டுப் பாடல் மரபு காலங் கடந்தும் வரம்பு கோலி நின்று நிலவியது. பெருஞ் சிந்தனையாளர் மனமும் அநுபூதி மான்கள் இதயமும் ஒன்ருகவே கருதும் என்று ஆங்கிலப் புலவர் ஒருவர் கூறுகிருர் (Great minds agree) இந்த வகையில் பாண்டியனும் பட்டர் பிரானும் கருத்தொருமித்துப் பாடியருளிய பாவடிகள் பல ஒரே தொடராக உள்ளன. ''வலிய வந்தென் தலைச் சேய் பதம் வைத்த தண்ணளியாய்'' என்று பாண்டியனர் பாடியதைப் பட்டர் பிரான், ''நின்பாதம் என்றும் வாசக்கமலம் தலைமேல் வலிய வைத்து ஆண்டு'' என்று பாடியருளுவர் இவ்வாறே ''கரும்புஞ் சணைாந்தும் பாசாங்குசமுங்கொண்டு அடியேன் திரும்புந் திசை தோறும் தோற்று கண்டாய்'' என்பது ''பார்க்குந் திசை தொறும் பாசாங்குசமும், பனிச்சிறை வண்டு, ஆர்க்கும்

**க. சி. குலரத்தினம்**

புதுமலர் ஐந்தும் கரும்பும் என் அல்லல் எல்லாம் தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும், என வந்துள்ளது. ''நுங்கேள்வர் பாகத்தும் அந்நான் மறையெனும் நூலிடத்தும் தொங்கேய் பொருட்டுக் கமலாலயத் துங்குடி கொண்ட நீ'' என்பது, ''நின் திருக்கோயில் நின் கேள்வர் ஒரு பக்கமோ அறைகின்ற நான் மறையின் அடியோ சஞ்சமோ'' என வந்துள்ளது. 'உன்னடிக்கே பொழியாப் புது மலரிட்டு நிற்பார்க்கு அழியாப் பதந் தருவாய்'' என்பது, ''புது மலரிட்டு நின்பாத விரைக் கமலம் இரவும் பசலும் இறைஞ்ச வல்லார் இமையோர் எவரும் பரவும் பதமும் ''என வந்துள்ளது. சடாடவியார் உண்ட காள விடத்தை அமுதாக்கும்

(4ம் பக்கம் பார்க்க)



துர்க்கை அம்மன் ஆலய முகப்புத் தோற்றம்


''தேரேறும் தேவியின் அருள் எமது வாடிக்கையாளர்களுக்குக் கிடைப்பதாக!''

தரமான தித்திக்கும் சுவைமிகு ● ஐஸ் கிறீம் ● வகைகளுக்கு

என்றும் புகழ்பெற்ற ஸ்தாபனம்

குணம் கிறீம் ஹவுஸ்

''நாங்கள் சொல்வதைவிட நீங்களே சுவைத்துப் பாருங்கள்''

குணம் கிறீம் ஹவுஸ்

கே. கே. எஸ் றேட், மயிலிட்டி

கிளை:-

குணம் கிறீம் ஹவுஸ்

துர்க்காபுரம்,

தெல்லிப்பழை.

''வாழியவள் திருத்தேர் வளர்க அவள் புகழ்''

காலத்திற்கேற்ப நவநாகரிக

✶ நகைகளைத் தெரிவுசெய்ய ✶

நம்பிக்கையுடன் நங்கையர் நாடுவது

★ சகீதா ★

ஜுவலர்ஸ்

(நகை வியாபாரத்தில் புகழ்பெற்றவர்கள்)

32, கே, கே, எஸ், வீதி,

சுன்ஞகம்,

(ஓடர் நகைகள் குறிப்பிட்ட தவணையில் செய்து கொடுக்கப்படும்)

''தேவி தேரேறும் இன்று அடியார் அகம் மலரும் நாள்''

✶ ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் உற்பத்தி செய்வோர்

✶ நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்

★ முருகன் ★

ஆபரண மஹால்

(தங்கப்பவுண் நகை உற்பத்தியாளர்கள்)

38, டாக்டர் சுப்பிரமணியம் வீதி,

சுன்ஞகம்

''தேரேறும்தேவியைப் போற்றிடுவோம்''

● சகலவிதமான பொருள்களையும் ✶

தரமாகவும் மலிவாகவும் பெற

இராஜேஸ்வரி

ஸ்ரோர்ஸ்

(பலசரக்குக் கடை)

இல. 16, புகையிரத வீதி,

சுன்ஞகம்,

''தேவியைப் போற்றினுல் தேவைகள் பூர்த்தியாகும்''

★ தரமான, சுத்தமான, அறுசுவை உணவு வகைகளுக்கும்

செல்வ விலாஸ்

புகையிரத வீதி

சுன்ஞகம்.

''தேரேறும் அம்பாளைப் போற்றுவோம்''

ஜெயகௌரி

ஜெயராம்ஸ்

எம்மிடம் சகலவிதமான

● பட்டுப் புடைவைகள்

● வேட்டி சால்வைகள்

✶ கூறைத் தினுசுகள்

● அன்பளிப்புப் பொருள்கள்

● ''பாட்டா'' சூஸ்

● மெத்தை வகைகள்

● றெடிமேட் உடுப்புகள்

விலை சகாயமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

JEYARAM

16, K. K. S. Road,

CHUNNAKAM

Jeyagowry

5, Modern Market,

CHUNNAKAM.

''துர்க்கையைத் துதிப்போர்க்குத் துன்பமேயில்லை''

★ சுதன் ★

ஸ்ரோர்ஸ்

(உதயன், ஈழநாடு, ஈழமுரசு பத்திரிகைகளின் முகவர்)

துர்க்காபுரம்

தெல்லிப்பழை.

''சக்தியைப் போற்றுவோம் — சகல பிணியும் அகலும்''

★ சயிக்கிள் உதிரிப்பாகங்கள்

✶ பலசரக்குபொருள்கள்

✶ பால்மா வகைகளுக்கு

★ சிறந்த ஸ்தாபனம் ✶

கந்தன் றேடர்

(மொத்த சில்லறை விற்பனையாளர்கள்)

துர்க்காபுரம் : தெல்லிப்பழை

கிளை:-

★ தரமான அரிசிக்கு

R. S. Rice Mills

கோணப்புலம் லேன்,

மல்லாகம்.

''தேவியைப் போற்றுவோம்! தேறுதலடைவோம்!!''

● பிளாஸ்டிக் பொருள்கள்

● விளையாட்டுப் பொருள்கள்

● சுவர்க் கடிகாரங்கள்

● எவர்சில்வர் பொருள்கள்

● அன்பளிப்புப் பொருள்கள்

ஆகியவற்றை தரமாகவும் நியாயமாகவும் பெற

புவனு றேடர்ஸ்

கே. கே. எஸ் வீதி

சுன்ஞகம்.

''வம்மின் வடம்பிடிமின் வாழ்த்துமின்''

★ ரெலிவிஷன் ★ குளிர்சாதனப்பெட்டி

★ தையல் மெஷின் இவைகளுக்காக

தையலர் போற்றும் தரமான பெயர்

★ சிங்கர் ★

துர்க்காபுரம் : தெல்லிப்பழை.

'' தேவியைப் போற்றுவோம் தேறுதலடைவோம்!''

தரமான கறுப்பு,

வெள்ளைப் படங்கள்

★ கலர்ப் படங்களுக்கு ★

பிறின்ஸ்

★ ஸ்ருடியோ ★

சுன்ஞகம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ★ தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி இரதோற்சவ சிறப்புமலர் ★

## தேரோடும் காட்சிச் சிறப்பு

ஒரு கோயிலில் தேரோட்டம் என்றாலே அக்கோயிலில் பெரிய விழா நடக்கிறது என்று மக்கள் கூடுவதைக் காணலாம். இது தேர்த் திருவிழா மிக்க சிறப்புடையதொன்று என்பதையே காட்டுகிறது.

தமிழ் நாட்டில் சிதம்பரம் மதுரை, திருவண்ணாமலை திருப்பதி, இராமேஸ்வரம் முதலிய கோயில்களில் வருடத்தில் பல தடவைகள் தேரோட்டம் நிகழ்வதை அறிகிறோம்.

ஈழத்திலும் இந்துமதக் கோயில்கள் பலவற்றில் தேர்த்திருவிழா நடைபெறுகின்றது.

சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த அழகிய தேரின் மீது தெய்வங்களின் திருவுருவங்களை வைத்து வீதிவலம், ஊர்வலம் வரச் செய்வது அந்த ஊருக்கு சிறப்பையும், புனிதத் தன்மையையும் அளிக்கின்றது என்றே கூறவேண்டும்.

தேரினது அமைப்பை உற்று நோக்குமிடத்து அது ஒரு சிறிய கோயில் போன்றிருப்பது தெரிய வரும்.

இதன் அடிப்பாகத்தில் பூலோக வாழ்க்கை, ஆகாய வாழ்க்கை, சுவர்க்க வாழ்க்கை ஆகியவற்றைச் சித்தரிக்கும் அழகிய உருவங்களைக் காணலாம்.

தெய்வ வடிவங்களை மூஷிகம், ரிஷபம், மயில், குதிரை முதலிய வாகனங்களில் எழுந்தருளச் செய்து வீதிவலம் வருவதைவிட கோயில் போன்ற உருவமைந்த

வரதும் தீவினைகளை அழித்து அருள் பாலிக்கிறது என்ற கருத்தை சிறப்பாக எடுத்துக் காட்டுகிது.

கோயிலினுள்ளே சென்று வழிபடஇயலாதிருக்கின்ற, சகலரதும் நலன் கருதித் தெய்வங்

### திருமதி கங்கேஸ்வரி கந்தையா

தேரில் எழுந்தருள்வித்து வலம் வரச் செய்வது—

பரம்பொருள் தம்பரிவாரங்களுடன் தாது கோயிலில் இருந்தபடியே ஒவ்வொருவரதும் வீட்டுக்கு வந்து அவர்களை

களை அவர்களது அண்மைக்குக் கொணரும் இவ்விதத் திருவிழாக்களை ஏற்படுத்தி வைத்த நம் முன்னோர் பெரிதும் போற்றப்பட வேண்டியவர்களே!

எல்லையில்லாப் பெருமை வாய்ந்த அம்மை இன்று சித்திரத் தேரிலே எழுந்தருளி வீதிவலம் வருகின்றாள்.

ஆத்தாளும், அண்டமெல்லாம் பூத்தாளும், புவியடங்கக் காத்தாளும் ஆகிய தெல்லிப்பழைத் துர்க்கை அம்பாள் ஒப்பற்ற தேரிலே இன்று பவனி வருகின்றாள்.

''விரும்பித் தொழும் அடியார்
விழிநீர் மல்கி மெய்
புளகம்
அரும்பித் ததும்பி
ஆனந்தமாகி''

நிற்க அன்னை தேரிலே

[5 ஆம்பக்கம் பார்க்க]

### அபிராமி அந்தாதி இலவசம்

யாழ்ப்பாணம், செப். 4

இன்று நடைபெறும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தேர்த் திருவிழாவின் போது 'அபிராமி அந்தாதி'' நூல் இலவசமாக வழங்கப்படும்.

அகில இலங்கை சபரி மலை ஸ்ரீ சாஸ்தா பீடத்தினரால் இந்நூல் விநியோகிக்கப்படும். (ஒ)

### அம்பிகையின்..

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சிவானந்தமே'' என்பது, ''வார்சடையோன் அருந்திய நஞ்சமுதாக்கிய அம்பிகை'' என வந்துள்ளது

''இணங்கேன் ஒருவரை நின்னிருதாளன்றி எப்பொழுதும் வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிறேன் வஞ்சநெஞ்சருடன் இணங்கேன் என வந்தவை, வணங்கேன், ஒருவரை வாழ்த்துகிலேன்' நெஞ்சில் வஞ்சகரோடு இணங்கேன், எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரோடும் பிணங்கேன்''என அமைந்துள்ளன.

இவ்வாறெல்லாம் திருவருள் மணம் எழுந்த செந்தமிழ்ப் பிரபந்தங்கள் அம்பிகை யடியார்களின் சிந்தையை நிறைவு செய்தல் வேண்டும். துர்க்கையம்பாளின் பெருங்கருணைத் தடங்கண்கள் எம்மைக் காத்தருள் புரிய வேண்டும்.


அன்னையின் எழிலில் அகிலமும் மகிழ்கிறது.''

★ இரும்புப் பொருள்கள்
★ பெயின்ற் வகைகள்
★ சகலவிதமான கட்டடப் பொருள்களையும்

தரமாகவும் நயமாகவும் பெற

★ ஈஸ்வரி ★
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
காங்கேசன்துறை வீதி,
சுன்னுகம்,

'' வற்றாத கருணை வெள்ளம்
எப்போதும் தந்தருளும்
துர்க்கா துரந்தரியே தேர்
மீது வருக வருக வென
வாழ்த்துகின்றோம் ''

★ தரமான எசென்ஸ் வகைகள்
● பேக்கரி உற்பத்திப் பொருள்கள்
● பொலித்தீன் தினுசுகள்
● கேக் தயாரிக்கும் பொருள்கள்
ஆகியவற்றுக்கு
நீங்கள் நாடவேண்டிய இடம்

● ஸ்ரீமேகலா ரேடர்ஸ் ●
9, கே. கே. எஸ். வீதி,
சுன்னுகம்.

''ஜனனியே ஜெகத்தினை வாழ்த்துங்கள்''

★ பலசரக்கு வியாபாரத்தில்
தலைவடியில் புகழ்பெற்ற ஸ்தாபனம் ★

★ உதயன் சஞ்சீவி ★
விநியோகஸ்தர்கள்
V.T. கந்தையா ஸ்ரோர்ஸ்
தாவடிச்சந்தி, கொக்குவில்.

வற்றாத கருணை எப்போதும்
பொழியும் துர்க்கா துரந்தரியே
தேர் மீது வருக! வருக!!

● மின் உபகரணங்கள்
● சைக்கிள் உதிரிப்பாகங்கள்
● விற்பனையாளர், ஒப்பந்தக்காரர்

★ ஹப்பி ★
எலெக்றிக்கல்ஸ்
கே. கே. எஸ். வீதி,
சுன்னுகம்,





'' தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர்என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.''

தரமான பொருள்! அளவான நிறை!! மலிவான விலை!!!

சுன்னுகத்தில் 'பலசரக்கு' வியாபாரத்தில் முன்னோடிகள்

பாலன் ஸ்ரோர்ஸ்

பொருட்களை மொத்தமாகவும், சில்லறையாகவும்பெற
நீங்கள் நாடவேண்டிய இடம்



பாலன் ஸ்ரோர்ஸ்

உரிமையாளர் : மா. சின்னராசா

கே. கே. எஸ். றோட் சுன்னுகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

நீ வாழும் இடத்தில் இன்ன நடக்கின்றது என்பதைப் பற்றியும் நீ நன்கு அறிந்து கொள். ஆனால் உன் வாயை மட்டும் திறவாதே.

— அன்னை சாரதாதேவி


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 892/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
04.9.1987 த.பெ.இல: - 23


## வேண்டாம் இந்த வினை

யாழ்ப்பாண நகரத்தின் ஒரு பகுதியில் நடந்த கோஷ்டி மோதல் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டிருக்கிறது. இரு கோஷ்டிகளுக்கு இடையேயான மோதலைத் தவிர்த்து சமாதானத்தை ஏற்படுத்திய தமிழீழ விடுதலைப் புலிகள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

கொட்டடி வாழ் மக்களும், நாவாந்துறை வாழ் மக்களும் மோதிக் கொண்டதில் எவருமே நன்மை அடையவில்லை. இருசாராரும் பல நஷ்டங்களையே அடைந்திருக்கிறார்கள். ஒரு சாராரின் வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. மறுபக்கத்தில் பலரது தொழில் உபகரணங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன இரு பக்கங்களிலும் பலர் காயமுற்று இருக்கின்றனர்.

தனிப்பட்ட குரோதம், பகைமை என்பவற்றைத் தூண்டும் உணர்ச்சியை அடக்க முடியாத ஒரு சிலரின் பலவீனத்தால், முழுத் தமிழ்ச் சமூகத்துக்குமே மோதல் சம்பவம் அவமானத்தை ஏற்படுத்தி இருக்கிறது. சம்பந்தப்பட்ட ஊர்கள் இரண்டிலும் பொருளாதார நஷ்டங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

இரு சமூக மக்களும் ஆண்டாண்டு காலமாக அருகருகே வாழ்ந்து வருகிறார்கள். இனியும் அப்படியே வாழவேண்டியவர்கள். இந்த மோதல் காரணமாக எந்த ஒரு பகுதியும் தங்கள் ஊரை விட்டுக் கூண்டோடு குடி பெயரப்போவதில்லை.

இதனை உணராமல் தனிப்பட்ட பகைமையால் எழுந்த மோதலை ஊர்ச் சண்டையாக்கி, பல பயங்கர ஆயுதங்களைப் பயன்படுத்தி தமிழர் மத்தியில் சாதிச் சண்டை அற்றுப் போகவில்லை என்பதைப் பறைசாற்றி விட்டது கொட்டடி — நாவாந்துறைச் சம்பவம்.

உரிமைப் போராட்டம் மழுங்கடிக்கப்பட்டு, தங்கள் உரிமைகளைப் பெற முடியாமல் பலவீனப்படுத்தப்பட்ட நிலையில் தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இது போன்ற கோஷ்டி அல்லது சாதி மோதல்கள் தமிழர்களிடையே இதுவரை இருந்த ஒற்றுமையைக் குலைக்கும் என்பது முதலாவது. வெளியார் எமது சமூக அமைப்பைக் குறைத்துப் பார்க்கவும், எம்மைக் கேலி செய்யவும் இடம் கொடுப்பதாக முடியும் என்பது இரண்டாவது. அவை இரண்டையும் விட மூன்றாவது பெரிய ஆபத்து ஒன்று உண்டு. எமக்கிடையே உள்ள கோஷ்டி, சாதி என்ற பூசல்களை —பலவீனங்களைப்— பயன்படுத்தித் தமிழர்களைப் பிளவுபடுத்தி, தமது காரியத்தைச் சாதிக்க வெளிச் சக்திகளுக்கு இடம் கொடுத்ததாக முடியும் என்பதே அதுவாகும்.

உரிமைப் போராட்டக் காலத்தில், மறைந்து போயிருந்த பேதங்களை மீண்டும் வளர்த்து, தமிழர்கள் தங்களுக்குள் தாங்களே மோதிக் கொள்ள அந்த வெளிச்சக்திகள் நிச்சயமாகத் தூண்டிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

கொட்டடி - நாவாந்துறை மோதல் போன்ற சம்பவங்கள், தமிழர்களைப் பிளவு படுத்தக் காத்திருக்கும் விரோத சக்திகளுக்கு இலகுவான வாய்ப்பைக் கொடுப்பனவாக அமையும்.

எனவே, தமிழ் மக்களிடையே கோஷ்டி மோதல்களோ, சாதிச் சண்டை- ஊர்ச்சண்டைகளோ தலைதூக்காமல் பார்த்துக் கொள்வது ஒவ்வொரு தமிழனதும் கடமையாகும்.

மிகக் கஷ்டத்துடன் வளர்த்து எடுக்கப்பட்ட தமிழர் ஒற்றுமையை உடைத்து விடாமல் கண்காணித்துக் கொள்ள வேண்டும். அதிலேயே எமது எதிர்கால நல்வாழ்வு தங்கி இருக்கிறது என்பதை சமூகப்பற்றுள்ள, இன அபிமானமுள்ள தமிழர்கள் ஒவ்வொருவரும் மறந்து விடலாகாது. தப்பான வழியில் செல்ல முயல்வோரைத் தடுப்பதும் அவர்கள் கடனே. வேண்டாம் இந்த வினை என்று புத்தி கூறுவதும் அவர்கள் பணியே.

---

மல்லாகத்தில்

## பால்மாடு வளர்ப்புக்கு ஆஸி.நிறுவனம் உதவி

யாழ்ப்பாணம், செப். 4

ஆஸ்திரேலியாவில் உள்ள வெளிநாட்டு சமூக உதவி நிலையம் பால்மாடு வளர்ப்புக்காக மல்லாகம் ஐக்கிய நாணய சங்கத்துக்கு ஒரு லட்சத்து எண்பது ஆயிரம் ரூபாவை உதவியாக வழங்க முன்வந்துள்ளது.

சங்கத்தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் அண்மையில் நடந்த சங்கக் கூட்டத்தில் இதனைத் தெரிவித்தார்.

இத்திட்டம் திறம்பட செயற்படுமானால் அடுத்த கட்டமாக உயிர் வாயு உற்பத்தி செய்யும் சாதனங்களை அமைக்கவும், பட்டர், சீஸ் போன்றவற்றைத் தயாரிக்கவும் இதே நிறுவனம் உதவும். (இ)

---

ஆயுதப்பரிகரண முயற்சியில் திடீர் திருப்பம்:

# மே.ஜேர்மனியிலிருந்து 72 ஏவுகணைகளை அகற்ற அமெ. தயார்!

### முட்டுக்கட்டை நீங்குகிறது

வாஷிங்டன், செப் 3

மேற்கு ஜேர்மனியில் இருந்து தனது 72 பெர்ஷிங் ஏவுகணைகளை அகற்றப்போவதாக அமெரிக்கா அறிவித்துவிட்டது.

இதைத் தொடர்ந்து றேகன் - கோர்பச்சேவ் உச்சிமாநாட்டுக்கு இடைஞ்சலாக இருந்து வந்த பிரதான முட்டுக்கட்டை நீக்கப்பட்டுவிட்டது.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா செல்லவிருக்கும் சோவியத் தலைவர் கோர்பச்சேவ், அதிபர் றேகனுடன் உச்சி மாநாடு ஒன்றை நடத்தும் வாய்ப்பு அதிகரித்துள்ளதாக ராஜதந்திர வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

நடுத்தர அணு ஆயுத ஒழிப்புத் திட்டத்தில் பெர்ஷிங் ஏவுகணைகளை அகற்றுவதையும் சேர்க்க வேண்டும் என்று சோவியத் வற்புறுத்தி வந்தது.

முடியாது என்று அமெரிக்கா முரண்டு பிடித்தது.

அதே நேரத்தில் இரண்டு வல்லரசுகளும் நடுத்தர அணு ஆயுதங்களை ஒழிப்பின் 72 பெர்ஷிங் ஏவுகணைகளையும் அகற்றிவிடுவதாக மேற்கு ஜேர்மனி அறிவித்து இருந்தது

இந்த நிலையில் 72 பெர்ஷிங் ஏவுகணைகளையும் மேற்கு ஜேர்மனில் இருந்து அகற்றிவிடப் போவதாக அமெரிக்கா நேற்று திடீரென்று அறிவித்தது. (உ-எ)

## பிலிப்பீன்ஸில் 21ராணுவவீரர் கொலை!

### கம்யூ. கிளர்ச்சியாளர் தாக்குதல்

மணிலா, செப். 3

பிலிப்பீன்ஸில் கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளர்கள் புதன்கிழமை 21 இராணுவ வீரர்களைச் சுட்டுக் கொன்றனர். 5 வீரர்கள் காயமடைந்தனர்.

கடந்த வாரம் இடம் பெற்ற இராணுவச் சதி முயற்சிக்குப் பின்னர் நடந்த முக்கிய தாக்குதலாக இது அமைந்தது.

மணிலாவில் இருந்து 50 மைல் தொலைவில் உள்ள கிராமத்தில் இம் மோதல் இடம்பெற்றது.

இதனிடையில் பிலிப்பீன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

ஜனாதிபதி கொரஸோனின் பதினெட்டு மாத கால ஆட்சியில் இராணுவத்தினரிடையே கருத்துவேற்றுமை, பிளவு மூன்னரிலும் பார்க்கப் பல மடங்கு அதிகரித்து உள்ளது.

-இப்படி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ எ)

### ஆர்ப்பாட்டத்துக்கு ரஷ்யாவில் தடை

மாஸ்கோ, செப். 3

மாஸ்கோவில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களுக்கு சோவியத் அரசு தடை விதித்து உள்ளது.

இத்தடை தற்காலிகமானது என்று சொவியத் அதிகாரிகள் அறிவித்தனர்.

கிரெம்ளின் மாளிகை, கே. ஜி. பி அலுவலகம் ஆகிய இடங்களைச்சுற்றி மக்கள் கூட்டம் கூடுவதும் பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது. (உ-எ)

## குடியேற்றக் கொள்கை; ஆஸி. அரசு மீளாய்வு

கான்பரா, செப். 3

தனது குடியேற்றக் கொள்கையை மீளாய்வு செய்யப்போவதாக ஆஸ்திரேலிய அரசாங்கம் நேற்று அறிவித்தது.

ஆஸ்திரேலியாவில் இதுவரை இடம்பெற்று வந்த குடியேற்றங்களினால் ஏற்பட்ட சமூக பாதிப்புக்கள், இனரீதியான மாற்றங்கள் முதலில் ஆராயப்படும். அதன் பின்னரே புதிய குடியேற்றக் கொள்கை தயாரிக்கப்படும்.

-இப்படிப் பிரதமர் பொப் ஹோக் அறிவித்தார்.

கடந்த பத்து ஆண்டுகளாக ஆஸ்திரேலியாவின் குடியேற்றக் கொள்கையில் மாறுதல் எதுவும் செய்யப்படவில்லை. (உ-எ)

---

வெளி உலகில்

## கோர்பச்சேவைச் சந்திக்க ரஷ்யாவிற்குள் அத்துமீறியஇளைஞர்!

மாஸ்கோ, செப் 3

சோவியத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவுடன் அணு ஆயுத பரிகரணம் பற்றி பேச்சுக்கள் நடத்தவே நான் தனி விமானத்தில் மாஸ்கோ கிரெம்ளின் மாளிகை அருகில் வந்து இறங்கினேன்.

—இப்படி 20 வயது மேற்கு ஜேர்மன் இளைஞர் மத்தியாஸ் ரஸ்ட் மாஸ்கோ உயர்நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

சோவியத் ஆகாயப் பிராந்தியத்தினுள் சட்ட விரோதமாக நுழைந்தது—

சோவியத் ஆகாய பிராந்தியச் சட்ட விதிகளை மீறியது—

காடைத்தனம் புரிந்தது ஆகிய குற்றங்கள் இவர்மீது சுமத்தப்பட்டிருக்கின்றன.

கடந்த மே மாதம் ஹெல்சிங்கியில் இருந்து (உ-எ)சோவியத் ஆகாயப் பிராந்தியத்தினுள் 500 மைல் ஊடுருவி மாஸ்கோவில் கிரெம்ளின் மாளிகை அருகில் இந்த மேற்கு ஜேர்மன் பிரசை வந்திறங்கினார்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து சோவியத் பாதுகாப்பு அமைச்சர், விமானப்படைத் தளபதி ஆகியோர் பதவி நீக்கஞ் செய்யப்பட்டனர் என்பது தெரிந்ததே.

மேற்கு ஜேர்மன் இளைஞர் மீதான வழக்கு கடந்த புதன்கிழமை விசாரணைக்கு வந்தது

ஜேர்மன் மொழி தெரிந்த சோவியத் வழக்கறிஞர் ஒருவர் இவருக்காக சோவியத் அரசால் நியமிக்கப்பட்டிருந்தார்.

குற்றங்களை மத்தியாஸ் ஒப்புக் கொண்டார்.

அப்போதே முன்கண்டவாறு யூரர் சொன்னார். தண்டனை - விதிப்பது ஒத்தி வைக்கப்பட்டது.

இப்படியான குற்றங்களுக்கு ஆகக் குறைந்தது பத்து வருடச் சிறைத் தண்டனை விதிக்க சோவியத் சட்டம் இடமளிக்கின்றது. (உ எ)

---

### யூதர் குடியேற்றம்

டெல் அவிவ், செப். 3

ஆக்கிரமிக்கப்பட்ட அரபு பிரதேசத்தின் மேற்கு கரையோரத்தில் தினமும் யூதர் குடியேற்றங்கள் நடத்தப்படும்.

—இப்படி இஸ்ரவேல் வீடமைப்பு அமைச்சர் டேவிட் லெவி அறிவித்தார். (உ-எ)

## அணுகுண்டு தயாரிக்க அரபு சம்மேளனம்

### கடாபி விடுக்கும் அழைப்பு

திரிபொலி, செப் 3

அரபு நாடுகள் ஒன்றிணைந்து அரபு சம்மேளனம் ஒன்றை அமைக்க வேண்டும்: அணுக்குண்டு தயாரிப்பில் அந்தச் சம்மேளனம் ஈடுபட வேண்டும்.

லிபியத் தலைவர் கேர்ணல் மும்மர் கடாபி முன்கண்டவாறு தெரிவித்தார்.

லிபியாவின் சுதந்திர தினத்தை ஒட்டி நடந்த பொதுக் கூட்டத்தில் கேர்ணல் கடாபி பேசினார்.

நீண்ட நாளைக்குப் பின்னர் பொதுக் கூட்டத்தில் கடாபி நிகழ்த்திய பேச்சைக் கேட்க லட்சக் கணக்கில் மக்கள் திரண்டிருந்தனர்.

பேச்சு 2½ மணித்தியாலங்கள் நீடித்தது.

கேர்ணல் கடாபி சொன்னதாவது:

சாட் நாட்டுடன் எமக்குப் பிரச்சினைகள் கிடையாது. அமெரிக்காவின் தூண்டுதலில் பிரெஞ்சுப் படைகள் சாட்டில் போரை ஆரம்பித்தன.

லிபியா நினைத்தால் சாட் நாட்டை பூரணமாகக் கைப்பற்றி விட முடியும்.

அரபு நாடுகள் ஒன்றுபட வேண்டும். அமெரிக்கா,, இஸ்ரவேல் ஆகியநாடுகள் அரபு நாடுகளின் நலன்களுக்கு எதிராக செயல்படுகின்றன. இவற்றை எதிர்த்துப் போராட அரபு மக்கள் ஒன்றுபட வேண்டியது அவசியம்.

இப்படி கேர்ணல் கடாபி சொன்னார். (உ-எ)

## சர்வதேச நிர்ப்பந்தம் எதற்கும் பணியோம்

### ஈரான் அறிவிப்பு

தெஹ்ரான், செப் 3

சர்வதேச நிர்ப்பந்தத்துக்கு நாம் பணியமாட்டோம்.

ஈரான் அரசாங்கம் மேற்கண்டவாறு நேற்று அறிவித்து விட்டது.

ஈராக் தொடர்ந்து ஈரானிய பொருளாதார இலக்குகள் மீது விமானக் குண்டு வீச்சை நடத்தி வருகின்றது.

இந்தக் கட்டத்தில் தான் ஈரான் முன்கண்டவாறு அறிவித்துள்ளது.

இதனிடையில் ஈரானின் பீரங்கிப் படகுகளின் ஏவுகணைத் தாக்குதலுக்கு ஐந்து எண்ணைக் கப்பல்கள் இலக்காகின. (உ-எ)

---

மட்டக்களப்பில்

## புளொட் இயக்கத்தினர் பிரமுகர்களை சந்தித்து வருகின்றனர்

மட்டக்களப்பு, செப். 4

மட்டக்களப்பில் புளொட் இயக்கத்தினர் பலரும் பிரசைகள் குழு, தமிழர் விடுதலைக் கூட்டணி, முஸ்லிம் அமைப்புக்கள் ஆகியவற்றைச் சேர்ந்த பிரமுகர்களைச் சந்தித்து உரையாடி வருகின்றனர்.

அமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் வீட்டில் தங்கியுள்ள இவர்கள் மாவட்டத்தின் பல பாகங்களுக்கும் விஜயம் செய்து வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இந்திய அமைதிகாக்கும் படையினரின் பாதுகாப்பு எதுவும் இன்றியே இவர்கள் நடமாடுகிறார்கள்.

இது தொடர்பாக இரா. வாசுதேவாவிடம் எமது செய்தியாளர் கேட்டார்.

அவர் பதிலளிக்கையில் எமது மண்,எமது மக்கள் மத்தியில் நாம் சுதந்திரமாக நடமாட எவராலும் தடை விதிக்க முடியாது. அதனால்தான் வழங்கப்படவிருந்த பாதுகாப்பை ஏற்கவில்லை.

எமது சுதந்திரமான நடமாட்டத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படுமானால் செத்து மடிவது மேல் என்றார். (இ-21)

### தேரோடும்-----

(4ஆம்பக்கத்தொடர்ச்சி)

ஏறிப் புறப்பட்டுப் பவனி வரும் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு அநுவிப்பவர்கள் புண்ணியப் பேறுடையவர்களே!

'துணையும் தொழுந் தெய்வமும் பெற்ற தாயுமாய் விளங்கும் துர்க்கை அம்பிகையின் பேரருள் நம்மனைவர்க்கும் என்றும் கிடைப்பதாக;

---

சமய சந்நிதிகளில்

### சுன்னாகம் மயிலணி ரதோற்சவம்

யாழ்ப்பாணம், செப். 4

சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாதப் பெருமான் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 29 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிறு காலை 9 மணிக்கு ரதோற்சவமும் மறுநாட் காலை10 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நிகழஇருக்கின்றன.

8 ஆம் திகதி மாலை 6 மணிக்கு திருக்கல்யாணம் நடைபெறும். (ஒ)

### பிரம்மோற்சவம்

யாழ்ப்பாணம், செப். 4 சங்குவேலி ஸ்ரீ சிவஞான .... பிரம்மோற்சவம் கடந்த 29 - 8 - 87 சனிக்கிழமை துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது,

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பகல் 10 - 30 மணிக்கு இரதோற்சவமும் அடுத்த நாள் திங்கட்கிழமை பகல் 10 – 00 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.


தீர்த்த விழாவிலன்று மாலை 6 மணியளவில் பெருமான் திருவூஞ்சல் நிகழும். (ஒ)

### தீவுப்பகுதி தபால்சேவை வழமை நிலையில்

நீண்ட கால இடைவெளிக்குப் பின் நெடுந்தீவு - நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை உட்பட தீவுப் பகுதிகளுக்கான நாளாந்த தபாற் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த சுமார் இரண்டு வருடங்களாக வாரம் இரு முறை மட்டுமே குடாநாட்டுத் தபால்கள் கொழும்புக்கு ... கள் ஆகியன இப்பகுதி ... பட்டுவந்தன (இ-131)

---



பொய்யாமொழி

குறள்:

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்.

பொருள்:

ஒருவனுக்கு வெற்றி பெற்றுத் தருவது வேல் அன்று; அரசனுடைய செங்கோலே ஆகும்; அச் செங்கோலும் கோணாதிருக்குமாயின்.

---

மட்டக்களப்பு - அம்பாறை

## பிரசைகள் குழு பிரமுகர்கள் டிக்ஷிற்றைச் சந்தித்து பேசினர்

மட்டக்களப்பு, செப். 4

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட பிரசைகள் குழு பிரமுகர்கள் இந்தியதூதுவர் திரு.ஜே. என். டிக்ஷிற்றைச் சந்தித்து மாவட்டங்களின் அண்மைக்கால, தற்போதைய, எதிர்கால நடவடிக்கைகள் குறித்து உரையாடினர்.

இந்திய தூதுவராலயத்தில் இடம் பெற்ற இச் சந்திப்பில் பிரசைகள் குழு சார்பில் செயலாளர் சட்டத்தரணிசாம் தம்பிமுத்து, பொருளாளர் மண்டூர் மகேந்திரன் ஆகியோர் இடம்பெற்றனர்.

இச் சந்திப்பின்போது பின்வரும் கோரிக்கைகள் அவரிடம் விடுக்கப்பட்டன.

★ பூஸா, பெலவத்தை தடுப்பு முகாம்களில் இருந்து இது வரை விடுதலை செய்யப்படாதோர் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

★ ஆயுதப்படை முகாம்கள் யாவும்தாமதமின்றி வாபஸ் பெறப்படல் வேண்டும்.

★ குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு காத்திருப்போர், தண்டனை அநுபவிப்போருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட வேண்டும். (ஒ-21)

### வடக்கு, கிழக்கு தொகுதிகளுக்கு இடைத் தேர்தல்

கொழும்பு, செப். 4

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் காலியாக உள்ள நாடாளுமன்றத் தொகுதிகளுக்கு விரைவில் இடைத்தேர்தல் நடத்தப்படும்.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன முன்னாள் எம். பி திரு. சூசைதாஸனிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார். திரு. சூசைதாஸன் செவ்வாய்க் கிழமை ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினார்.

அரசமைப்புச் சட்டத்தில் ஆறாவது திருத்தம் ரத்துச் செய்யப்படமாட்டாது என்றும் அப்போது ஜனாதிபதி கூறினார். (இ-எ)

### உயிருடன் இருக்கிறார்களா?

கல்முனை, செப். 4

கடந்த காலங்களில் அம்பாறை மாவட்ட தமிழ்க் கிராமங்களில் இருந்து இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட இளைஞர்கள் உயிருடன் இருக்கிறார்களா? இல்லையா?

இப்படிக் கோரும் விண்ணப்பங்களை அக்கரைப்பற்றிலுள்ள இந்திய இராணுவப்பொறுப்பதிகாரியிடம் தாய்மார் தினமும் கையளித்து வருகின்றனர். (ஒ-84)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# உதயன்

04 - 09 - 1987 வெள்ளிக்கிழமை




# புனர்வாழ்வு நடவடிக்கைக்கு தனியாக இணைப்பு நிலையங்கள்

## வடக்கு, கிழக்கில் தலா இரண்டு

யாழ்ப்பாணம், செப். 4
வடக்கு-கிழக்கு மாகாணங்களில் புனர் வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்க அதிபர்கள் தலைமையில் இணைப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

யாழ்ப்பாணம், திருமலை மாவட்டங்களில் தலா மூன்று நிலையங்களும் மட்டக்களப்பில் இரு நிலையங்களும் ஏனைய மாவட்டங்களில் தலா ஒவ்வொரு நிலையமும் அமையும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இருப்பிட வசதிகள் வழங்கிமீளக்குடியமர்த்த பின்வருவன உடனடியாகத் தேவையாக இருப்பதாக நிதியமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

★ வீடுகள் – 75ஆயிரம்
★ சிமெந்து - 20 ஆயிரம் மெற்றிக் தொன்
★ கூரைகள்-ஒருகோடி 70 லட்சம் ரூபா
★ நீர் இறைக்கும்கருவி – 200
★ மருந்து தெளிக்கும் கருவி – 175
★ சிலீப்பர் கட்டைகள் –65 ஆயிரம்
★ ரேலர்கள் – 20
★ பஸ் – 125
★ லொறி – 30
★ டிரக்டர் - 100
★ ஜீப் 100
★ மீன்பிடி படகு –125
★ இதுதவிர மருந்து வகைகள்.

புனர் வாழ்வுக்கு உதவி வழங்கும் நாடுகளை விட மேலதிகமாக அரபு நாடுகள் சோஷலிச நாடுகள் உட்பட 22 நாடுகள் உதவி வழங்க முன் வந்துள்ளதாக நிதி அமைச்சு தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (உ-21)

## பொன்னம்மான் நினைவுக்கூட்டம்

குருநகர், செப். 4
மறைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களில் ஒருவரான பொன்னம்மானின் நினைவுதினக் கூட்டம் இன்று நடைபெறும்.

யாழ். பரமேஸ்வராச் சந்தியில் நிறுவப்பட்டுள்ள நினைவுச் சின்னத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. மாத்தயா திறந்து வைப்பார். (உ-51)

## திருமலை, சீனன்குடா அகதிகள் திரும்புகின்றனர்

திருகோணமலை, செப். 4
திருகோணமலையில் சீனன்குடா, கிளப்பன் பேர்க் அகதிமுகாம்களில் தங்கியுள்ள அகதிகளில் பெரும்பாலோர் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்கின்றனர்.

250 அகதிக் குடும்பங்கள் கடந்த திங்கட்கிழமை மூதூர் இடது கரை வாய்க்கால் பகுதிக் கிராமத்துக்கு நான்கு லொறிகள், ஐந்து பஸ்களில் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டன.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஆயிரம் ரூபா பணமாக வழங்கப்பட்டது.

இடம் பெயர்ந்த பல அகதிகள் உப்புவெளி. முருகாபுரி, பள்ளத் தோட்டம்,துவரங்காடு, 10 ஆம் குறிச்சி ஆகிய பகுதிகளில் மீண்டும் குடியேறுகின்றனர்.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் சகல அகதிகளும் முகாம்களை விட்டு வெளியேறி விட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ-150)

## சோபித தேரர் பொலிஸ் நிலையத்தில்

கொழும்பு, செப. 4
கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்ட வண. சோபித தேரர் கொழும்புத் துறைமுகப் பொலீஸ்நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றார்.

ஜனாதிபதி கொலை முயற்சி சம்பந்தமான விசாரணைக்கும் தேரர் சம்பந்தப்பட்ட விசாரணைக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகின்றது (உ-எ)

# கிழக்கின் முதலமைச்சர் பதவியை முஸ்லிம்கள் இழக்கத்தயாரில்லை!

## சென்னையில் அமைச்சர் முகம்மது தகவல்

சென்னை, செப். 4
கிழக்கில் முதலமைச்சராக வரும் வாய்ப்பை முஸ்லிம்கள் இழக்கவிரும்பவில்லை.

- இப்படி போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது தெரிவித்தார்.

இந்தியா சென்ற சமயம் அமைச்சர் முகம்மது சென்னையில் செய்தியாளர் மத்தியில் பேசினார்.

அப்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

வடக்கு, கிழக்கு இணைப்பை நான் எதிர்க்கின்றேன்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம்கள் மட்டுமல்ல, தமிழர் கூட இணைப்புக்கு எதிராக வாக்களிப்பர்.

கிழக்கு மாகாணத்தில் 33 சதவீதம் முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இணைப்புக்கு ஆதரவளிப்பதன் மூலம் 13 சதவீதமாக தங்கள் பலத்தைக் குறைக்க முஸ்லிம்கள் விரும்புவார்களா?

இணைப்பு சம்பந்தமான சர்வசன வாக்கெடுப்பை ஜனாதிபதி ஒத்திவைக்கலாமே ஒழிய ரத்துச் செய்ய முடியாது.

இணைப்பு விஷயத்தில் முஸ்லிம்கள் தமிழருடன் ஒரு இணக்கத்துக்கு வர முடியாதா? இப்படி ஒரு செய்தியாளர்கேட்டார்.

''இதுசாத்தியம்தான், இதற்கு நிறையப் புரிந்துணர்வும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் தேவை,''—

வடக்குத் தமிழரின் ஆதிக்கத்தை எதிர்த்து கிழக்கில் இயக்கமே நடத்தப்படுகின்றது. ஆனால் அரசியலில் எதுவும் நடக்கலாம்·

இப்படிப் பதிலளித்தார் அமைச்சர். (உ-எ)

## ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் புதைத்த ஆயுதங்கள் இந்தியப்படையால் மீட்பு

### தம்பலகமத்தில் சம்பவம்

கொழும்பு, செப். 4
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரால் புதைத்து வைத்து இருந்ததாகக் கூறப்படும் ஆயுதங்களை இந்திய அமைதிப் படையினர் மீட்டெடுத்தனர்.

இச்சம்பவம் திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகமம் கிராமத்தில் இடம்பெற்றது.

தகவல் ஒன்றைத் தொடர்ந்தே இந்திய அமைதிப்படையினர் தம்பலகமம் தெற்கு வன்னிச்சியார் திடல் விஞயகராலய வளவுக்குச் சென்றனர்.

மீட்கும்போது குண்டுகள் வெடிக்கலாம் என்ற அச்சத்தில் ஆலய வளவுக்குள் பொதுமக்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

நிலத்தைத் தோண்டி பெருமளவு ஆயுங்களை இந்தியப் படையினர் மீட்டனர். (உ-எ)

## வன்செயல்கள் தெற்கில் அதிகரிப்பு

கொழும்பு, செப் 4
தென் இலங்கையில் கடந்த புதன் கிழமையுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் மூவர் கொல்லப்பட்டனர். ஆறுபேர் காயமடைந்தனர்.

4 துப்பாக்கிகள், 2 வான்கள் கொள்ளையிடப்பட்டன.

மிரிகம என்ற இடத்தில் ரிஸர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டார்.

மற்ற இரண்டு பேரும் வியாங்கொடவிலும் பன்னூரலவிலும் சுட்டுக் கொல்லப்பட்டனர். (உ-எ)

## காவலில் இருப்போர் விவரங்களைத் தருக

### நடவடிக்கைக்குழு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 4
தடுப்புக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களினதும்தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்போரினதும் பெயர் விவரங்களை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு முன் யாழ். பல்கலைக் கழகத்தில் தந்துதவுமாறு யாழ். பல்கலைக் கழக நடவடிக்கைக் குழு கோரியிருக்கிறது.

கைதிகள் விடுவிப்புச் சம்பந்தமாக இந்திய சமாதானப் படை அதிகாரிகளிடம் தொடர்பு கொண்ட இக்குழு தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு உதவியாகவே இவ் விவரங்களைக் கோருவதாகத் தெரிவித்திருக்கிறது.

## மட்டு---

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கத்தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை இப்பகுதியில் சடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட 'சித்தபுர' இராணுவ பயிற்சி நிலையம், அங்கு அமைக்கப்பட்டு வரும் பௌத்த கலாச்சார நிலையம் ஆகியனவும் குடியேற்றத்திற்கு வழியமைப்பதாக கூறப்படுகிறது.

புணானை எல்லையிலிருந்து வெளியேறிய கடவத்தமடு சிங்கள கிராமவாசிகள் மீண்டும் அப்பகுதியில் குடியமர்கிறார்கள். (உ-21)

## ஆசி----

(1ம் பக்கத் தொடர்ச்சி)
நிதியை அங்கு கையளித்தார்.

அதன் பின்னர் அவர் யாழ் பிரஜைகள் குழு உறுப்பினர்களை சந்தித்துப் பேசினார்.

இதற்கு முன்னதாக அவர் யாழ் வைத்திய சாலைப் பணிப்பாளர் டாக்டர் நாச்சினார்க்கினியாருடனும் பேச்சுவார்த்தை நடத்தியதாக தெரிகிறது.

வடக்கில் பாதிக்கப்பட்ட வேறு பல நிறுவனங்களுக்கும் அவர் நிதி உதவி வழங்கியதாகத் தெரிகிறது. (உ-7)

## கைதிகளை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
யாளரோ, உதவி ஆணையாளரோ சமுகமளிக்கவில்லை. யாரைப் பற்றி உங்களிடம் சொன்னேனோ அந்த அதிகாரிதான் அங்கு இருந்தார்.

இதை அறிய நீங்கள் ஆச்சரியப்படலாம்.

சிறையில் உள்ள எனது கூண்டுக்குள் சென்று எனது உடமைகளை எடுக்க அனுமதிக்கப்படுவேன் என்று சிரேஷ்ட அரச சட்டத்தரணி எனக்கு உறுதியளித்திருந்தார். அதன்படி நான் அனுமதிக்கப்படவில்லை.

சிறைச்சாலை விதிகள் அதற்கு அனுமதி அளிக்கவில்லை என்று சமுகமளித்திருந்த அதிகாரி சொன்னார்.

நீதிமன்றினால் விடுவிக்கப்பட்ட ஒரு கைதி தனது உடமைகளைச் சிறைக்குள் போய் எடுக்கத் தடைசெய்யும் சிறை விதிகள் பற்றி என்னால் நினைக்கவே முடியாதிருக்கின்றது.

—இப்படித்தான் சிறைச்சாலைகள் இயங்குகின்றன. குழப்பங்களும் கொலைகளும் சிறைகளில் நிரந்தர அம்சங்களாக மாறிவிட்டது பற்றி ஆச்சரியப்படத் தேவையில்லை.

கைதிகளின் நலன்களில் மிகுந்த அக்கறை காட்டுபவர்களில் நீங்களும் ஒருவர்.

என்னை விடுவிப்பதில் காட்டிய அவசரத்தை சட்டமா அதிபர் ஏனைய அரசியல் கைதிகள் விஷயத்திலும் காண்பிக்க வேண்டும். அதன் மூலம் சமாதான ஒப்பந்தத்தை அமுல்நடத்துவதில் திவிரம் இருப்பதைக் காட்டுங்கள்.

—இப்படி வண. பிதா சிங்கராயர் பிரதிஅமைச்சரைக் கேட்டு இருக்கின்றார். (உ-எ)

## இடம் மாற்றம்

மட்டக்களப்பு, செப் 4
வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடமையாற்ற விருப்பம் தெரிவித்துள்ள தமிழ் பேசும் பொலீஸ் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் இம் மாதம் 15ம் திகதி முதல் அமுல் செய்யப்படவுள்ளது.

வடக்கு – கிழக்கிற்கு வெளியே கடமையாற்றும் பொலீஸாரிடமிருந்து பெறப்பட்ட சம்மதத்தின் பிரகாரம் இவ் இடமாற்றங்கள் வழங்கப் பட்டுள்ளது.

## திருமலைக்கு மேலும் அமைதிப்படை

கொழும்பு, செப். 4
திருகோணமலைமாவட்டத்தில் உள்ள சில கிராமங்களில் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுவதாகக் கூறப்படும் முறைப்பாடுகளைத் தொடர்ந்து அப்பகுதிகளுக்கு மேலதிகமாக இந்திய அமைதிப்படையினரை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது. [உ-எ]

## சர்வதேச நாணய சபை கொழும்பு வரும்

கொழும்பு, செப் 4
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள வன்செயல் பாதிப்புக்களை மதிப்பீடு செய்ய சர்வதேச நாணயச் சபையின் குழு ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பு வரும். (உ-எ)

## சங்கர் தயாள் பதவியேற்பு

புதுடில்லி, செப். 4
திரு. சங்கர் தயாள் சர்மா இந்தியாவின்புதிய உபஜனாதிபதியாகநேற்று பதவி ஏற்றார்.

ஜனாதிபதி இராமசாமி வெங்கட்ராமன் அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

## மீண்டும் வேலை

யாழ்ப்பாணம், செப் 4
வடக்கு - கிழக்கு மாகாண சம்பவங்கள் காரணமாக வேலையிழந்த ஆசிரியர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்துவது தொடர்பான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

வெளிநாடுகளில் தஞ்சம், தடுப்புக்காவல், தலைமறைவு போன்ற காரணங்களினால் வேலையிழந்த ஆசிரியர்கள், கல்விப் பணிப்பாளரூடாக கல்வி அமைச்சின் செயலாளருக்கு மனுச் செய்யலாமென அமைச்சு வட்டாரங்கள் (உ)தெரிவித்தன.

## மோதல்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டிருந்த விடுதலைப் புலிகள் மீது ரெலோ இயக்கத்தினர் தாக்குதல் நடத்தியதாக விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்தனர்.

பின்னர் இந்திய அமைதிப் படையினருடன் புலிகள் அவ்வழியே சென்ற போது அமைதிப் படைனர் மீதும் ரொக்கட் லோஞ்சர் கொண்டு இக்குழுவினர் பெரும் தாக்குதல் நடத்தியதாகவும் புலிகள் தெரிவித்தனர்.

## துணைவேந்தர் குழு இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், செப். 4
இலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள், பதிவாளர்கள் இன்று பிற்பகல் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

யாழ்தேவி ரயில் மூலம் வரும் இவர்களை யாழ். பல்கலைக் கழகப் பதில் துணைவேந்தர், பதிவாளர் ஆகியோர் வரவேற்பர்.

இன்றுமாலைநல்லூர்கந்தசுவாமி ஆலயம், நல்லை ஆதீனம் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்யும் இவர்கள், பாதிக்கப்பட்ட யாழ். நகரம், கொட்டடி ஆகிய இடங்களையும் பார்வையிடுவர்.

சனிக்கிழமை பிற்பகல் துணைவேந்தர்கள் குழு தெல்லிப்பழை, வடமராட்சி, தொண்டமனாறு பகுதிகளைப் பார்வையிடும்.

ஞாயிறு காலை யாழ் தேவி ரயில் மூலம் குழு கொழும்பு திரும்பும். [உ-எ]

## நீத்தார் பட்டியல்

### தம்பிமுத்து துரைராசா

கொழும்பு Free Lanka Stores உரிமையாளர் தம்பிமுத்து துரைராசா 02-09-87 புதன்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற தம்பிமுத்து தம்பதிகளின் புதல்வரும், கனகம்மா, பொன்மணி, பூமணி, தேவி, பாக்கியலீலாவதி, தர்மகுலராஜசிங்கம், திருஞானசம்பந்தர்: Gowry Silks Emporium ஆகியோரின் சகோதரரும், தம்பையா, ஆறுமுகம், தனபாலசிங்கம், சிவசுப்பிரமணியம், புஸ்பராணி ஆகியோரின் மைத்துனரும், சத்தியேந்திராவின் பெரியப்பாவுமாவார். இறுதிக்கிரியைகள் 05-09-87 சனிக்கிழமை அளவெட்டி மகாத்மா வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 10-00 மணியளவில் காங்கேசன் துறையிலுள்ள குடும்ப மயாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
த. திருஞானசம்பந்தர்

## இலங்கை----

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
பிலிப்பீன்ஸ் வாசி

இவர்கள் வேலைசெய்து வந்தஎண்ணெய்க் கப்பல் விமானத் தாக்குதலில் சேதமடைந்தது. இக்கப்பல் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள கம்பெனி ஒன்றுக்குச் சொந்தமானது.

5 மாலுமிகள் காயமடைந்தனர். (உ-எ)

## ஈ.என் எல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கள் சந்தித்து உரையாடுவர்.

— இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. [உ-7]

## குருநகரில்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)
இயக்கங்கள் இனிவேண்டாம் என்றும் வேண்டிக் கொண்டனர்'

இவ்வேளை பொதுமக்களைக் கலைந்து செல்ல வேண்டிக்கொண்ட இந்திய அமைதிப் படையினரிடம், 'இவர்களை இங்கிருக்க விடவேண்டாம். அப்போழுதுதான் நாம் கலைந்து செல்வோம்' என்று தெரிவித்தனர்.

நாளை (வெள்ளியன்று) அவர்களை அங்கிருந்து அனுப்புவதாகப் பதில் தெரிவிக்கப்பட்டது.

அதனை அடுத்து அங்கு கூடியிருந்த பொதுமக்கள் கூட்டம் கலைந்து சென்றது.

இது பற்றி இக்குழுவின் பொறுப்பாளரிடம் வினவிய போது–

'தமது இயக்கத்தின் கொள்கைத் திட்டத்தை நன்றாகப் புரிந்து கொள்ளாத மக்களே அவ்வாறு கேட்டுக்கொண்டிருக்கின்றனர் என்று தெரிவித்தார்.

'நாளை நீங்கள் இங்கிருந்து போவதாகக் கூறப்பட்டதே? என்று கேட்டதற்கு 'அப்படி ஒரு எண்ணமும் எங்களுக்கு இல்லை. எமது கொள்கைகள் அவ்வப்போது பத்திரிகைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன இனிமேலும் தெரிவிக்கப்படும்' என்றார்.

'நாமிங்கு பகிரங்கமாக ஒரு பொதுக்கூட்டத்தை மக்கள் மத்தியில்வைத்து எமது கொள்கைத் திட்டங்களை பொதுமக்கள் மத்தியில் தெரிவிக்க உள்ளோம். அதன் பின்னால் பொதுமக்கள் எங்களை போகச் சொன்னால் போவோம்' என்றும் கூறினார்.

'நாங்கள் பொதுமக்களுக்கு அப்பாற்பட்டவர்களல்லர்; நாமும் பொதுமக்கள்என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும் என்றும் சொன்னார் (உ-51)

## முஸ்லிம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
முஸ்லிம்களைத் தூண்டிவிடும் யுக்தியுடன் தீய சக்திகள் செயற்பட்டு வருவதாகவும் சொல்லப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை உகந்தையில் நான்கு முஸ்லிம்கள் தாக்கப்பட்ட சம்பவமும்—

அதனை ஆட்சேபித்து ஊர்வலம் நடத்தியோர் மீது 'குண்டு வீசப்பட்ட சம்பவமும்—

முஸ்லிம் மக்களின் உடைமைகள் சேதமாக்கப்பட்ட சம்பவமும்—

மட்டக்களப்பு ஓட்டமாவடியில் இரண்டு முஸ்லிம்கள் உயிருடன் எரிக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவமும்— வாசகர்களுக்குத் தெரிந்ததே.

அவற்றோடு உதவி அரசாங்க அதிபர் கொலை, முஸ்லிம் மக்களின் வீடுகளை எரித்தது ஆகிய சம்பவங்கள் பீதி நடந்திருக்கின்றன. (அ)


## விநியோகப் பையன்கள் தேவை

பத்திரிகைகளை விநியோகிக்கவும், பத்திரிகைகளை மடிப்பதற்கும் விநியோகப் பையன்கள் தேவை. யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும். உடன் விண்ணப்பிக்கவும்.

முகாமையாளர்,
உதயன் / சஞ்சீவி,
தபால்பெட்டி இல. 23,
யாழ்ப்பாணம்,



**Electrical Installation in Buildings and Factory Maintenance**

இலங்கை மின்சாரசபை, லங்கா சிமெந்து லிமிட்டெட். வெளிநாடுகள் ஆகியவற்றில் மின்அத்தியட்சராகவும், பொறியியலாளராகவும் 25 வருடங்களுக்கு மேல் சேவை செய்து அனுபவமுள்ளவரின், மேற்பார்வையில் சகல வயறிங் வேலைகளும், வயிண்டிங் வேலைகளும் செய்யப்படும்.

ஆலோசனைகள் இலவசம்;

OMEGA. — Manipay Road, JAFFNA:


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 04-09-1987ல் அச்சிட்டு வெளியிடப் பட்டது.
Printed and Published by New Uthavan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Friday September 04 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org